BSNL ஊழியர் சங்கம்
தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:121 **தேதி**:-24.07.2016

ஓய்வூதியருக்கு 78.2% IDA இணைப்பு!!!
ஓய்வூதியம் வழங்க 60% உச்ச வரம்பு நீக்கம்!!!

வெற்றி விழா- 27.07.2016

அன்பார்ந்த தோழர்களே,

ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய 78.2 சதவிகித பஞ்சப்படி இணைப்பு ஊழியர்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் 01.01.2007 முதல் கிடைக்காமல் போனது. ஆனால் BSNL ஊழியர் சங்கம் ஒரு தொலை நோக்கு பார்வையோடு அதிகாரிகளுக்கு வழங்கும் சமயத்தில் ஊழியர்களுக்கும் 78.2% பஞ்சப்படி இணைப்பை அமுலாக்க வேண்டும் என்று ஒப்பந்தம் போட்டது.

அதன் காரணமாக, ITS அதிகாரிகளுக்கு ஒரு சில சலுகைகளை BSNL நிர்வாகம் அறிவித்த போது BSNLல் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பான FORUM கால வரையற்ற வேலை நிறுத்த அறைகூவல் விடுத்தது. வேறு வழியின்றி 12.06.2012 அன்று நிர்வாகம் நமது கோரிக்கையை ஏற்று கொண்டது. ஆனால் DOT ஒப்புதல் வழங்க தாமதப்படுத்தியதால் FORUM மீண்டும் 12.06.2013 முதல் வேலை நிறுத்த அறிவிப்பு வெளியிட்டது. விளைவு? 10.06.2013 அன்று தொலை தொடர்பு துறை அதற்கான உத்தரவை வெளியிட்டது. 8,000 கோடி ரூபாய் நஷ்டத்தில் இருந்த போதும் நாம் வென்றோம். இது BSNLல் உள்ள FORUM கூட்டமைப்புக்கு போராட்டத்திற்கு கிடைத்திட்ட முதல் வெற்றி.

ஓய்வூதியதாரர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு:- பணியில் இருக்கும் ஊழியர்கள் 78.2% பஞ்சப்படி இணைப்பிற்கான பலனை 10.06.2013 முதல் பெற்ற போதும், ஓய்வூதியர்களுக்கு கிடைக்கவில்லை. 01.01.2007 முதல் 10.06.2013 வரை பணி ஓய்வு பெற்ற பல நூற்றுக்கணக்கான தோழர்களுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டது.இது ஓய்வூதியதார்களுக்கு இழைக்கப்பட்ட கடும் அநீதியாகும். இந்த அநீதியை களைய , BSNL ஊழியர் சங்கமும், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒன்றுபட்ட அமைப்பான FORUMமும், AIBDPA சங்கமும் பல கட்ட போராட்டங்களை நடத்தியுள்ளன.

BSNLல் ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு ((JAC) 27.11.2014 அன்று நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்தியுள்ளது.

AIBDPA சங்கம் பல்வேறு தர்ணாக்கள், உண்ணாவிரதங்கள், CCA அலுவலகங்களை நோக்கி பேரணி, பிரதமருக்கு அஞ்சல் அட்டை இயக்கம் மற்றும் புதுடெல்லியில் சஞ்சார் பவன் நோக்கிய பேரணி உள்ளிட்ட பல கட்ட போராட்டங்களை நடத்தியதுடன், மத்திய அமைச்சர், பல அதிகாரிகள் உள்ளிட்டவர்களை தொடர்ந்து சந்தித்து வலியுறுத்தி வந்தது.

இது மட்டுமல்லாமல் FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS இந்த முக்கியமான கோரிக்கையை தங்களின் அனைத்து போராட்டங்களிலும் மிக முக்கியமான கோரிக்கையாக இணைத்திருந்தது. இதன் உச்ச கட்டமாக எந்த விதமான பொருளாதார கோரிக்கையும் இணைக்கப்படாமல் FORUM சார்பாக நடத்தப்பட்ட 2015, ஏப்ரல் 21 & 22 தேதிகளில் நடைபெற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்திலும் ஓய்வூதியர்களுக்கு 78.2% இணைப்பு, மற்றும் BSNL இடம் இருந்து அரசுக்கு வரும் வருமானத்தில் 60 சதவிகிதம் அளவிற்கான ஓய்வூதியம் மட்டுமே அரசின் பொறுப்பு ,, மீதியை BSNLலே ஏற்க வேண்டும் என்கின்ற கட்டுப்பாடு நீக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையும் அதில் வைக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் மாதம் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளை விவாதிக்க 01.05.2015 அன்று அரசாங்கத்தின் சார்பில் தொலை தொடர்பு துறையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் FORUM தலைவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். அதில் தான் இந்த இரண்டு பிரச்சனைகளின் மீதுள்ள நியாயத்தை ஏற்றுக் கொண்ட தொலை தொடர்பு துறையின் செயலாளர், இந்த பிரச்சனைகள் மீது மத்திய அமைச்சரவைக்கு ஒரு குறிப்பினை அனுப்புவதாக உறுதி அளித்தார். அதன் அடிப்படையில் இந்த அமைச்சரவை குறிப்பு தயார் செய்யப்பட்டது. இந்த அமைச்சரவைக் குறிப்பை தயாரிக்கவும், அதில் பல அமைச்சரகங்கள் கேட்ட சந்தேகங்களுக்கு, BSNLலும் தொலை தொடர்பு துறையும் விளக்கங்களை தர செய்வதற்கும் FORUM தலைவர்கள் எடுத்த முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல.. அவற்றை எல்லாம் அவ்வப்போது நமது இணையதள செய்திகளில் தெரிவித்து உள்ளோம். இதற்கு இடையில் அதீத கால தாமதம் ஏற்பட்ட போது 22.12.2015 அன்று நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகள், ஊழியர்களின் தொழிற்சங்களின் கூட்டமைப்பான FORUMத்தின் அறைகூவலின் அடிப்படையில் நடைபெற்ற ஒன்று பட்ட, உறுதியான தொடர் போராட்டங்கள் காரணமாக, 05.07.2016 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்கம் நமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது. இந்த அமைச்சரவைக் கூட்ட முடிவினை ஒட்டி 18.07.2018 அன்று தொலை தொடர்பு துறை 40-13/2013-Pen(T)என்கிற உத்தரவு எண் மூலம் 78.2% பஞ்சப்படி இணைப்பிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதே போல 20.07.2016 தேதியிட்ட DOTயின் கடித எண்: 40-13/2013-Pen(T) மூலம், BSNL ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசாங்கம் முன்னர் விதித்திருந்த 60 சதவிகிதம் என்கிற கட்டுப்பாட்டினை நீக்கியுள்ளது. இதன் மூலம் 01.01.2007 முதல் 10.06.2013 வரை ஓய்வு பெற்றோர்களுக்கு பலன் கிடைக்கப்பட உள்ளது. அவர்களின் ஓய்வூதியத்தில் நல்ல தொரு முன்னேற்றமும் ஏற்படும்.

தாங்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் என்கின்ற உணர்வில் இருந்த ஓய்வூதியதாரர்கள், இன்று மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி உள்ளனர். இது BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த மகத்தான் வெற்றி. ஒற்றுமைக்கு

கிடைத்த வெற்றி. **இந்த வெற்றியை நாம் அனைவரும் கொண்டாடும் வகையில் 27.07.2016 அன்று AIBDPA மற்றும் FORUMத்தில் உள்ள அனைத்து தோழர்களையும் இணைத்து வாயிற் கூட்டம் நடத்தி இனிப்பு வழங்கி கொண்டாட வேண்டும் என புதுடெல்லியில் கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு அறைகூவல் விட்டுள்ளது.** தமிழகத்தில் அனைத்து மாவட்டத்திலும் இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக சிறப்பாக நடத்தி அதன் புகைப்படங்களை தமிழ் மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டுகிறோம்.

ஆனால் இது தோழர் இஸ்லாம் அஹமதின் பராக்கிரம முயற்சியால் கிடைத்தது என்று NFTE BSNL இன்று பிரச்சாரம் செய்து வருகிறது. ஒரு சில பேர் அவருக்கு விழாஎடுத்து வருகின்றனர். ஒரு நபர் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தின் மூலமாகவே இந்த பிரச்சனை தீர்வு காணப்பட்டது என்று பிரச்சாரம் செய்வது ஊழியர்களின் ஒன்று பட்ட போராட்டத்தையும், ஊழியர்கள், அதிகாரிகளின் ஒற்றுமையையும் சிறுமைப்படுத்தும் முயற்சியாகும்.

27.07.2016 அன்று BSNL ஊழியர் சங்கம் இந்த ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றியை பிரம்மாண்டமாக கொண்டாடுவோம். இந்த பிரச்சனைகளின் தீர்விற்கும், எதிர்காலத்தில் BSNLஐ காக்கவும், BSNL ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் தேவையான ஒற்றுமைக்கு பெருமை கொள்வோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
மாநில செயலாளர்